முன் வந்திருக்கிறது. அதே போன்று சென்னையில் இருந்து ராணிப்பேட்டை வரையில் இருக்கிற அந்தச் சாலையை நான்கு லேனாக மாற்றுவதற்கு இன்வெஸ்ட்டிகேட் செய்ய ஏ.டி.பி. முன் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9–50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி சற்குணம் அவர்களுக்கு இனிமேலும் விடை ஏதும் தேவைப்படுமா ?

திருமதி எஸ். பி. சற்குணம் : பேரவைத் தலைவர் அவர் களே, இதுவே போதுமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்குமே இது போதுமானது.

இராமப்புற சாலைப் பிரிவையும், நெடுஞ்சாலைப் பிரிவையும் இணைக்கும் திட்டம்.

*7966 டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப்புற சாலைப் பிரிவையும், நெடுஞ்சாலைப் பிரிவையும் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர் களே,

(அ) மற்றும் (ஆ): நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையில் தற்போதுள்ள 6 தலைமைப் பொறியாளர்களின் பணி அமைப்பினை சீர்திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலைப் பிரிவையும், கிராமப்புற சாலைப் பிரிவையும் பொறுத்த வரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல 6 சி.இ.-க்கள் இருக்கிறார்கள். Highways–Rural Works; R.R.–C.E.– National Highways; N. H. 45 C. E.; Tamil Nadu Urban Development Project C.E; Highways Research Station C. E. இப்படியாக அறுவர் இருக்கிறார்கள். ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களாகட்டும், பொதுமக்களாகட்டும், மற்றவர்கள் ஆகட்டும், இந்த அதிகாரிகளை அணுகுகிற போது இந்த சி.இ.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இடத்திலே போனால் இன்னொரு சி.இ. இடத்திலே போக வேண்டும் என்று சொல்கிறார். அவரிடத்திலே போனால் அவர் நேஷனல் ஹைவேஸ் சி.இ. இடத்திலே போங்கள் என்று சொல்கிறார். இப்படி we are being driven from pillar to post ஓடிக் கொண்டிருக்க வேண்டிய நிலை இருக்கிறது. தனித் தனியாக சி. இ.-க்கள் இருப்பதால் இவ்வளவு குழப்பங்களும், பிரச்சினை களும் இருக்கின்றனவே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிசீலனையில் உள்ளது என்று சொல்லி விட்டார். அதற்கு மேல் என்ன செய்வது ?

டாக்டர் க. காஞ்சனா : பேரவைத் தலைவர் அவர்களே, இணைத்த பிறகு ஏற்படக் கூடிய நிர்வாகச் சிக்கல் குறித்து அமைச்சர் அவர்கள் விவரம் அளிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர் களே, முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் கேட்ட கேள்வியும் இந்தக் கேள்வியோடு இணைந்த ஒன்றாகும். பொதுவாகவே ரெகுலரும், ஆர். ஆர்.-ம் ''பேரலல்'' ஆக வேலை செய்து கொண்டிருந்தன. அதைப் பற்றி நான் மற்ற அதிகாரிகளோடும், மற்ற உறுப்பினர்களோடும் கலந்து பேசி ஆர். ஆர்.-ஐயும் ரெகுலரையும் ஒன்றாக இணைக்க லாம் என்று ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். அப்படிப் பார்த் தால் ரெகுலரில் 4 சர்க்கிள் இருக்கின்றன. ஆர். ஆர்.-இலும் 4 சர்க்கிள் இருக்கின்றன. இரண்டையும் இணைத்து 10 சர்க்கிள் ஆக்கி அவர்களுடைய தூரத்தைக் குறைக்கலாம் என்று நாம் முடிவு செய்திருக்கிறோம். இரண்டாவதாக அவர்கள் ஒன் றைக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் டாக்டர் என்பதால் அவர்களுக்குத் தெரியும். கண்ணுக்கு வியாதி வந்தால் கண் டாக்டரிடம் தான் போக வேண்டுமென்று சொல்வார்களே அல்லாது காது டாக்டரிடம் போ என்றா சொல்வார்கள்? வயிற்றைப் பார்க்கிற மதனகோபாலிடத்திலே போனால் அங்கே போ என்று தான் சொல்வார். ஆக கண்ணுக்கு வேறு டாக்டர், வயிற்றுக்கு வேறு டாக்டர் என்று எப்படி பிரிக்கப்பட்டு இருக் கிறதோ அதே போல் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆனால் இந்த சாலை களுக்கெல்லாம் நீங்கள் ஒரே அமைச்சர் என்ற முறையில் அவர்கள் கேட்கிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது எல்லோருக்கும் டீன் மாதிரி. (சிரிப்பு) ஆகவே நேஷனல் ஹைவேஸ் ஆங்காங்கே தனித் தனியாக இருக்கும். ஆர். ஆர்.ஐயும், ரெகுலரையும் இணைக்கலாமா என்று தான் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆர். ஆர்.-க்கு எங்கெங்கே சர்க்கிள் அமைக்கப்பட்டிருக்கிறது ? அதன்னியில் கிராமப்புறச் சாலைகள் வண்டித் தடங்களாக வளைவும், நெளிவும் கொண்டதாக இருந்து இப்போது ஒரு 10 கிலோ மீட்டர் தொலைவு என்று கணக்கிடப்பட்டிருந்தால் அந்தப் பாதை சீராக்கப்பட்டு, நேராக்கப்பட்ட பின்னர் அந்தத் தொலைவு குறைந்து ஒரு $7\frac{1}{2}$ அல்லது 8 கிலோ மீட்டர் என்று ஆன பிறகும் கூட ஆரம்பத்தில் கணக்கிடப்பட்டு பதிவேடுகளில் என்ன பதிவாகி இருந்ததோ அந்தத் தொலைவையே கணக்கில் எடுத்துக் கொண்டு மேம்பாட்டுப் பணிகளும், பராமரிப்புப் பணிகளும் செய்யப்படுகின்றனவே, அதனால் அரசுக்கு இலட்சக் கணக்கில் பண இழப்பு ஏற்படுகிறது என்று சொல்கிறார்களே, இதை அரசு அறியுமா ? அதை நிவர்த்தி செய்ய அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆர். ஆர். எங்கே இருக்கின்றன என்று சொல்கிறேன். ஒன்று செங்கற்பட்டு, இரண்டு சேலம், மூன்றாவது திருச்சி, நான்காவது நெல்லை. ஆக 4 சர்க்கிள்கள் தான் இப்போது இருக்கின்றன. இன்னும் வேண்டுமென்றால் 14 டிவிஷன்கள் இருக்கின்றன. 53 ஏ. இ. இருக்கிறார்கள். அடுத்து அவர்கள் தெரிவித்தார்கள். சாலை வளைந்து இருக்கிற போது கொஞ்சம் அதிகமான தூரம் இருக்கும். நேராக அந்தச் சாலையைக் கொண்டு வந்த பிறகு அதனுடைய தூரம் குறையும். அதற்கும் சேர்த்து, அவர்கள் பில் போடுகிறார்கள். அவர்கள் போடுகிற செய்தியை, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், நான் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-55 மணி

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராமப்புற சாலைப் பிரிவினை முதன் முதலில் துவக்கியது, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். சில நல்ல திட்டங்களுக்காக இந்தப் பிரிவினை அன்றைய தினம் ஏற்படுத்தினார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சாலைப் பிரிவின் மூலமாக, 1989-90 ஆம் ஆண்டில் எத்தனை சாலை அபிவிருத்திப் பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன, ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற நிதி எவ்வளவு என்பதை இந்த அரசு அறிவிக்குமா என்பதை வேண்டிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : இது பற்றி அறிய, 23 ஆம் தேதி வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன். காரணம், இந்த கேள்வி தொடர்பு இல்லாதது. அத்தகைய புள்ளி விவரங்கள் என்னுடைய மானியக் கோரிக்கையிலே நிறைய கிடைக்கும்.

1990 ஏப்ரல் 16]

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையிலே கொண்டு வருகிற சீர்திருத்தம்—ஏற்கனவே, நெடுஞ்சாலைத் துறை மிக அதிகமான ரோடுகளை பராமரிக்கிற, மிகப் பெருத்த பணச்சுமையில் இருக்கிறது. இதிலே கிராமப்புறச் சாலைகளையும் இணைத்துவிட்டால், கிராமப்புறச் சாலைகளுக்குக் கிடைக்கிற தனிக் கவனம் பாதிக்கப்பட்டுவிடும் என்ற கவலை இருக்கிறது. ஆகவே, தனித்து இயங்க வேண்டும் என்ற கோரிக்கையை, அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அவர்களுக்கு இப்போது இருக்கிற ஏரியாக்கள் குறைகிற போது கவனம் சரியாக இருக்கிறது. பரந்து விரிந்து இருப்பதை விட, குறிப்பிட்ட எல்லையை நிர்ணயித்து, இடத்தை குறைவாக்கினால், அதிக கவனம் ஏற்படும் என்றுதான் பொறியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

சாலை அமைத்தல்

*2153 திரு. ஏ. சுப்பு: திரு. வீ. பெ. துரைசாமி:
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் கொல்லிமலை அரப்பளீஸ்வரர் கோவிலிலிருந்து ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிவரை சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அரசு ஆணை (நிலை) எண். 2314, சமூக நலத்துறை, நாள் 13—10—1984-ல் சேலம் கொல்லிமலை அரப்பளீஸ்வரர் கோயிலிலிருந்து ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி வரை சாலை அமைக்கும் பணிக்கு ரூபாய் 40.00 இலட்சத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலையின் நீளம் 7 கி.மீ. ஆகும். இதில் ரூபாய் 3.15 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டு, 280 மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக்கப்பட்டது. மீதிப் பகுதி காப்பு வனத்துறை பகுதியில் செல்கிறது. எனவே, காப்பு வனப் பகுதியில் சாலை அமைக்க மத்திய அரசின் ஒப்புதல் கோரப்பட்டது. மத்திய அரசு ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டபடியால், மேற்படி சாலைப் பகுதியில் நடைபாதை தகுந்த நீள அகலங்களுடன் தீர்த்தமலை முதல் நீர்வீழ்ச்சி வரை அமைக்க ஏதுவாகும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS